THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

November, 1954

CONNEMARA PUBLIC LIBRARY
No.
19 JAN 1956
MADRAS

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 DEC 1954
MADRAS

12779
1095
4.8

மதுரை-ராமநாதபுரம்

அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

நவம்பர், 1954

1.

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர்:— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை,
மதுரை ஜில்லா.

உதவி பத்திராதிபர்:— C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்,
ராமநாதபுரம் ஜில்லா.

மானேஜர்:— கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பதிப்பாளர்:— சங்கை C. P. ஹைனமென், வினக்ஸ் பிரஸ், பசுமலை,
மதுரை ஜில்லா.

பத்திரிகைக் கமிற்றி:—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.
„ தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.
„ தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.
„ ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.
„ A. சாமுவேல் ஐயர், பசுமலை (தலைவர்.)

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்
2. திருச்சபைச் செய்திகள்
3. சிறுவர் பாகம்
4. பிரசங்கக் குறிப்புகள்
5. இயேசுவின் ஜெபப்பள்ளி
6. கிறிஸ்து ஜயந்தி நடிப்பு
7. இரக்ஷணிய மனோகரம்
8. கி.மு. சங்கப்பொருட்கள்
9. வேத வினாக்களும், விடைகளும்
10. விளம்பரம்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த

மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

ஸ்தகம் XVI பசுமலை, நவம்பர் 1954 இலக்கம் 1

வருடசந்தா : 1 ரூ. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்

தல்லாகுளம்,
29 – 10 – 54.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

இரண்டு மாதமாக அமெரிக்காவிலே தங்கிய பின், மறுபடியும் உங்களோடிருப்பது எனக்கு மிகவும் சந்தோஷமான காரியம். அந்த இரண்டு மாதங்களின் சங்கதியெல்லாம் சொல்ல நேரமில்லை. விசேஷமாக அமெரிக்காச் சபைகளில் காணப்பட்ட உற்சாகமும், கிறிஸ்தவ ஈகையும், பரஸ்பர அன்பும் அதிகமாய் மெச்சத்தக்கவை அதையெல்லாம் கண்டு, புது உற்சாகத்தோடு திரும்பி வந்தேன்.

வரும்போது கன்வென்ஷன் கூட்டங்கள் நடந்து கொண் ...ன. கனம் தானியேல் நடத்திய நாலைந்து கூட்டங்களில் ...து கொண்டேன். அவருடைய செய்தி மிகவும் தெளிவா ...ந்தது மனந்திரும்புங்கள் விசுவாசியுங்கள் என்பதே. பரிசுத் ...ரவியின் வல்லமையால் இந்த அழைப்பு அநேகருடைய இருதயத் ...ல் பிரவேசித்து பலன் தந்திருக்கிறது இதுவரை ஜெபம் செய்யாத ...டும்பங்களில் குடும்ப ஜெபம் நடைபெறுகிறது என்றும், ...கப்பட்ட சில குடும்பங்கள் ஐக்கியப்பட்டன வென்றும் ...ள்விப்பட்டேன். இதைப்போன்ற இன்னும் அநேக நற்கனிகள் ...தும் என்று நம்புகிறேன். இவ்விதமாக வசனத்தைக்கேட்டு ஏற்றுக்கொண்டவர்கள், சோர்ந்து போகாமல் நல்ல போராட்டத்தில் போராடக்கடவர்கள்.

போன வருஷம் நவம்பர் மாதம் 15ம் தேதியன்று ஒரு பொது கடிதத்தை உங்களிடம் எழுதினேன். அதில் அருள் மாரியாகிய பரிசுத்த ஆவிக்காக ஜெபிக்க உங்களை அழைத்தேன். அது முதல் இதுவரை உங்களில் அநேகர் அவ்விதமாக ஜெபிக்கிறீர்கள் என்று

அறிந்திருக்கிறேன். இந்தக் கன்வென்ஷன் மூலமாகக் கர்த்தர் அநேகர் பேரில் இந்த அருள்மாரியைப் பெய்ய செய்திருக்கிறார். அதுபோல நமது அத்தியக்ஷாதீனம் முழுவதிலும் அது பெய்ய வேண்டும். அதற்காகப் பல இடங்களில் சிறு கன்வென்ஷன்களையும், எழுப்புதலான கூட்டங்களையும் நடத்துவோம் என்று நம்புகிறோம். இதைப்பற்றி உங்கள் போதகரோடு கலந்து பேச வேண்டும்.

அதுவரை நாம் எல்லாரும் இன்னும் அதே ஜெபத்தை ஏறெடுப்போமாக. ஒவ்வொரு பாஸ்டரேட்டிலும் ஜெபவகுப்புகள் இருக்கின்றன வென்று நம்புகிறேன். "இயேசுவின் ஜெபப்பள்ளி" என்னும் குறிப்புகள் இன்றும் மாதாமாதம் வெளியிடப்படுகின்றன. இவைகளைப் பிரயோஜனப்படுத்திக் கொள்வோமாக. நாம் போன வருஷம் யோசித்தபடியே, இந்த 1954—55ம் வருஷம் சபை எழுப்புதல் வருஷம் ஆகும்படி கடவுளைக் கேட்போமாக.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்.
அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்

நவம்பர்	6, 7	திருமங்கலம் திடப்படுத்தல் ஆராதனை.
	12	சர்வே கமிற்றி.
	13	பசுமலை திடப்படுத்தல் ஆராதனை.
		உசிலம்பட்டி ,, ,, ஆவிக்குரிய கூட்டம்
	17	பாளையங்கோட்டை
	19	மூன்றுடைப்பு-புதுப்பட்டி ஆலயப்பிரதிஷ்டை
	19-20	கிறிஸ்தவநூல் கழகம்
	21	தல்லாக்குளம் திடப்படுத்தல் ஆராதனை.
	28	மதுரை வடக்குவாசல் ,, ,,
டிசம்பர்	3-5	ஒட்டன்சத்திரம் பாஸ்டரேட்
	6-9	அத்தியட்சாதீனக் கமிற்றிகள்.

திருச்சபைச் செய்திகள்.

CONNEMARA PUBLIC LIBRARY
19 JAN 1958
MADRAS

1. சபையின் திருநாட்கள்.

டிசம்பர் 5 அட்வெந்து ஞாயிறு 2
வேதாகம ஞாயிறு.
12 அட்வெந்து ஞாயிறு 3.
19 ,, ,, 4.
21 பரி. தோமாவின் திருநாள்.
25 கிறிஸ்து ஜயந்தி.
26 கி ஜனன திரு. பின் ஞாயிறு 1.
பரி ஸ்தேவான் திருநாள்
கிறிஸ்தவக் குடும்பப் பண்டிகை.
27 பரி. யோவான் திருநாள்.
28 குற்றமில்லாப் பாலகர் திருநாள்.

2. அகிலலோக ஜெபநாள்.

இது லெந்து நாட்களின் முதல் வெள்ளிக்கிழமை (பெப். 25, 1955) நடக்கும் ஷை நாளுக்குரிய ஆராதனையொழுங்கு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு விற்பனைக்கு தயாராக இருக்கிறது. பிள்ளைகளுக்குரிய ஆராதனை நூறு ரூ. 1½ விதமும், பெரியவர்களுக்குரிய ஆராதனை நூறு ரூ. 2 விதமும் நமது அத்தியட்சாதீன புஸ்தகசாலையில் கிடைக்கும். அனைவரும் வாங்கி உபயோகிக்குமாறு அன்புடன் கேட்கிறோம் எனக் கனம் தைரியம் அம்மாளவர்கள் தெரிவிக்கிறார்கள்.

3. தாய்மார் சங்க தலைவிகளின் கூட்டம்.

இக்கூட்டம் செப்டம்பர் மாதம் 20-ம் தேதி முதல் 23-ம் தேதிவரை குற்றாலத்தில் நடை பெற்றது. திருநெல்வேலி அத்தியட்சாதீன தாய்மார் சங்கத் தலைவிகளின் கூட்டத்திற்கு மதுரை, இராமநாதபுரம், திருச்சினாப்பள்ளி சகோதரிகள் அழைக்கப்பட்டிருந்தார்கள். மதுரை இராமநாதபுர அத்தியட்சாதீனத்திலிருந்து 23 தாய்மார்கள் அக்கூட்டங்களில் பங்கு பெற்றோம்.

ஏறக்குறைய 500 தாய்மார் கூடியிருந்தோம். சாப்பாடும், தங்கவசதியும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. யாவரும் ஒரே குடும்பத்தினர் போல் மிகவும் சந்தோஷமாய் சரீரப்பிரகாரமும், ஆத்மப்பிரகாரமும் போஷிக்கப்பட்டோம்.

இந்நாட்களில் மகா கனம் அத்தியட்சரவர்கள் என்னை நோக்கிப் பார் (ஏசாயா 45 : 22) படி (மத். 11 : 29) பிடி (மத். 4 : 19) என்னும் பொருள்களின் பேரில் பிரசங்கம் செய்தார்கள்.

சகோதரன் தானியேல் என்பவர் கியா. 13 : 8 ம் வசனத்தில் கிறிஸ்தவ இல்லத்தின் முக்கிய லக்ஷணங்கள் எவை என்பதைப் பற்றியும நித்திய ஜீவனுகிய கிருபையைத் தரித்துக் கொள்ளுதலைப் பற்றியும் பிரசங்கித்தார். தானியேல் அம்மாள் அவர்கள் ஒரு கிறிஸ்தவ குடும்பத்திலுள்ள வல்லமையைக் குறித்து கானனிய ஸ்திரீயின் விசுவாசத்தின் பேரில் பிரசங்கம் செய்தார்கள் (மத். 15 : 22-28).

ஈரோட்டிலிருந்து வந்திருந்த சகோதரி கிரேஸ் ஏரன் அம்மாள் 'லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்' (லூக். 17 : 32) என்பதன் பேரிலும், 'இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டு வேன்' (மத். 16 : 18) என்பதன் பேரிலும், 'ஒருவன் தாகமாயிருந் தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்' (யோ. 7 : 37) என்னும் வாக்கியத்தின் பேரிலும் பிரசங்கம் செய்தார்கள்.

கனம சூலபோன் சைமன் ஐயரவர்கள் 'என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய் குடியிருக்கிறேன்' (II இரா 4 : 13) ஓர் சந்தோஷமான வீடு என்பதன் பேரிலும், 'ஆயக்காரன் தூரத்திலே நின்ருன்' (லூக் 18 : 13) என்னும் வசனத்தின் பேரிலும் பிரசங் கம் செய்தார்.

டாக்டர் ஏசுதாசன் அவர்கள் லூக். 2 : 52-ஐ பிரசங்க வாக் கியமாகக் கொண்டு, ஆவிக்குரிய வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, சரீர வளர்ச்சி, சமுதாயவளர்ச்சி, பொருளாதாரவளர்ச்சி என்னும் ஐந்து விதமான வளர்ச்சியைப்பற்றி பிரசங்கித்தார்.

முடிவாக கிரேஸ் ஏரேன் அமமாளவர்கள் 'பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்' (யோ 20 : 21) என்னும் வாக்கியத்தில் பிரசங்கம் செய்தார்கள்.

இப்பிரசங்கங்கள் வந்திருந்த அனைவருக்கும் எழுப்புதலையும் புத்துயிரையும் அளித்தன.

இவ்வாருன ஆவிக்குரிய கூட்டங்கள் நம் அத்தியட்சாதீனத் திலும் தாய்மார்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டால் தாய்மாரின் ஆவிக்குரிய ஜீவியம் உன்னத நிலையடைந்து சபைக்குப் பிரயோஜன மாய் விளங்குவார்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன் என ஸ்ரீமதி ஜூலியா வேதமாணிக்கம் அம்மையார் எழுதுகிருர்கள்.

4. செவல்பட்டி வேதநாயகம் போதகர் ஞாபகார்த்த முதியோர் கல்வி பள்ளி வாசகசாலைகளின் திறப்பு விழா.

செவல்பட்டியில் காலம் சென்ற சங்கை தேவநாயகம் போதகர் ஞாபகார்த்த முதியோர் பள்ளியும் வாசக சாலையும் மதுரை—ஹார்வி பட்டி உயர்திரு செல்லச்சாமி அவர்களால் 3—10—54ல் திறந்து

வைக்கப்பட்டது சங்கத்தின் அங்கத்தினர் இவ்விழாவை வெகு சிறப்பாக கொண்டாடினர். செவல்பட்டி பாஸ்டரேட்டின் போதகர் சங்கை ஞானக்கண் தேவதாஸ் அவர்கள் ஷை ஸ்தாபனங்கள் இயேசுக்கிறிஸ்துவைப்பற்றி சாட்சி பகரும் கருவியாக இருக்கும்படி அங்கத்தினர் முயலுவது அவர்களுடைய கடமை என்பதை வற்புறுத்திக் கூறினார். விழாவிற்கு தலைமை வகித்த உயர்திரு செல்லச்சாமி அவர்களும் ஹார்விப்பட்டி ஆசிரியர் உயர்திரு ஆபிரகாம் அவர்களும் அங்கத்தினரின் கடமைகள் எவை என்பதை வெகு தெளிவாக தங்களுடைய உபந்நியாசங்களில் எடுத்து கூறினார்கள். செவல்பட்டி தலைமை ஆசிரியர் விழாவிற்கு வந்திருந்த பெரியோரை வரவேற்று நன்றி தெரிவித்தார். ஷை ஸ்தாபனங்கள் வாலிபருக்குள் ஒற்றுமையையும் உற்சாகத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது என்று ஸ்ரீ ஜேம்ஸ் ஆசிரியர் எழுதுகிறார்.

5. ஆவிக்குரிய கூட்டங்களில் பங்கு பெற்ற யாவரும் பின்பற்ற வேண்டிய சில குறிப்புகள்.

பரிசுத்தாவியானவரின் சாட்சி உங்களுக்குள்ளே இருக்கிறதாவென்றும், நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாவென்றும் சிந்தனை செய்யுங்கள். தேவனுடைய ராஜ்யத்தின் பிள்ளைகளாக நாம் பிறந்தால்தான், நாம் ஆண்டவரைப்போல் வளர்ந்து அவரைப்போலாக முடியும். ரோ. 8 : 16 ; i யோவா. 5 : 10 நீங்கள் கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் என்பதை உணருங்கள். உங்களுக்கு கைகள், கால்கள், கண்கள் முதலிய ஆவிக்குரிய அவயவங்களிருந்த போதிலும் இன்னும் நாம் அவைகளை உபயோகிக்க சக்தி போதாது. நீங்கள் வசனத்தை வாசித்து, ஜெபித்து நல்ல ஐக்கியப்பட்டு சாட்சி கூறி வளர வேண்டும். கடவுள் உங்களுக்குச் செய்ததை மற்றவர்களுக்குக் கூறவேண்டும். சுவிசேஷங்களை நன்றாய் வாசிக்கவேண்டும். அப்போஸ்தலர் நடபடிகள், i தீமோத்தேயு, ii தீமோத்தேயு, ஆதியாகமம், அதி. 12-25, 37-50, சங்கீதங்கள், ஏசாயா : 1-3, 40-66. எரேமியா : 1-3, 23, 33, 42, 29, தானியேல், நெகேமியா முதலிய வேதபாகங்களை கருத்தாய் வாசிப்பதோடு சமயம் கிடைக்கும்போது வேத புஸ்தகத்தை ஒழுங்காய் வாசிக்கவேண்டும். நேரத்தை வீணாய்ச் செலவு செய்யாதபடி சந்திக்கிற நண்பரோடு வேதத்தை வாசித்து, ஜெபிப்பது நல்லது. ஓய்வு நாட்களில் உங்கள் சபையாருக்காக ஊக்கமாக ஜெபித்து அவ்வாரத்தில் கடவுள் அளித்த நன்மைகளைப்பற்றி உபதேசியுங்கள்.

காலையில் 5-மணிக்கு எழுந்து புதிய ஜீவனுக்காக ஸ்தோத்திரிக்க வேண்டும். சிலுவையைப்பற்றி பின் தியானித்தல் நலம். பின் வேத புஸ்தகத்தை வாசித்து, உங்களில் குறைவுபடுங்காரியங்களுக்

காக ஜெபியுங்கள். பின் உங்கள் சபைக்காகவும், உறவினர்க்காக வும், உடன் பிறந்தோருக்காகவும் ஜெபியுங்கள் காலை 6 : 30க் குள் தியானத்தை முடித்துவிட்டு உங்கள் தினசரி வேலைகளைச் செய்ய ஆயத்தமாயிருங்கள் உங்கள் வேலைகளை, கடவுள் உங்களை நோக்கிக் கொண்டிருக்கிறார் என்ற உணர்ச்சியுடன் செய்யுங்கள் மத்தியான வேளையில் 10-நிமிஷ நேரம் ஜெபியுங்கள். சாயங்காலத்தில் தனித்து வயல்வெளி சென்று சத்தமாய் ஜெபியுங்கள். பெண்கள் வீட்டி லிருந்து ஜெபிக்கலாம். இரவில் குடும்ப ஜெபம் வையுங்கள். விவாக மானவர்கள், நித்திரைக்குப் போகுமுன் மனைவியோடு, குடும்ப தேவைகளுக்காக ஜெபிக்கவேண்டும்.

ஒவ்வொரு நாளும் ஜெபிக்குமுன் வேதம் வாசியுங்கள் தேவன் தமது வசனத்தின் மூலமும் மெல்லிய சப்தத்தின் மூலமும் உங்களி டம் பேசுவார். வேதாகமத்தில் வசனங்களை அடையாளம் செய்து கடவுள் பேசியவைகளைக் குறித்துக் கொள்ளுங்கள். கர்த்தருக்கு எப்போதும் கீழ்ப்படியுங்கள். சிந்தனையிலும், பார்வையிலும், விருப் பங்களிலும், செய்கையிலும் சுத்தமாயிருங்கள். பாவம் எங்கிருந் தாலும் விலகியோடுங்கள். பழைய சிநேகிதரை ஜாக்கிரதையாய் விட்டு விலகுங்கள், உங்கள் ஜீவியம் பலப்படும் வரை உங்கள் உற்றார் உறவினரையும் விட்டு விலகியிருங்கள் அவர்களிடம் பேச நேரிட்டால் தேவனுக்குரியவைகளைப்பற்றி பேசுங்கள் அப்போது நீங்கள் தேவனுடையவர்கள் என்று கண்டு தாங்களும் அவரை அண்டுவார்கள்.

உங்கள் தலைவருக்குக் கீழ்ப்படியுங்கள். எக்காரணத்தைக் கொண்டும் அவர்களை அவமதிக்க வேண்டாம். அவர்களுக்கு மாறாக நீங்கள் எண்ணினால் கடவுளிடம் உதவியை நாடி அவர்களுக் குத் தெரியப்படுத்துங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக ஒன்றும் செய்யவேண்டாம். சுத்த இருதயமும், தூய மனச்சாட்சியும் மிகத் தேவையானவை. அப் 24: 16. i தீமோ. 1 : 5, 19 ; ii தீமோ. 2 : 22. கூடுமானால் ஒவ்வொரு நாளும் சிலரோடு ஜெபித் தல் நல்லது, நற்குணமும், சுத்த ஜீவியமுமுள்ள சிலரைச் சேர்த்து, ஒரு ஜெபக்கூட்டம் ஆரம்பித்தலும் நல்லது.. உங்கள் ஆவிக்குரிய சந்தேகங்களைப்பற்றி நீங்கள் நம்புகிற தலைவர்களிடம் கலந்து கொள்ளுங்கள்.

பண விஷயங்களில் பூரண உண்மையாக இருங்கள். உங்கள் வருமானத்தில் பத்திலொன்று தேவனுக்குக் கொடுத்து, அதில் ஒரு பங்கு சபைக்கும் ஒரு பங்கு தேவனுடைய வேலைக்கும் சேரக் கடவது. உங்களுக்கு பயனளிக்கக்கூடிய பக்தர்களின் சரித்திரத் தை வாசியுங்கள்.

CONN... 14 JAN 1956

நீங்கள் நித்திரைக்குச் செல்லும்போது சுத்தமான மனச சாட்சியோடு செல்வது நலம் உங்களைப் பகைக்கிறவர்களுக் காகவும், விரோதிகளுக்காகவும் ஜெபியுங்கள். உங்கள் அதிகாரி களுக்காக அன்போடு ஜெபியுங்கள் உங்களுக்குக் கீழ்பட்டவர் களுக்காகவும் ஜெபியுங்கள் சமயம் கிடைக்கும் போதெல்லாம் ஜெபியுங்கள். ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் வேத புஸ்தகத்தை யும் வாசியுங்கள். உங்கள் பேச்சுகளையும், வார்த்தைகளையும் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள். பயனற்ற எந்த வார்த்தையும் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். அன்பற்ற வார்த்தைகளுக்காகவும், சிந்தனை களுக்காகவும் தேவனிடம் மன்னிப்புக்காக ஜெபியுங்கள். உங்கள் ஆவிக்குரிய தகப்பன்மாருக்காகவும் ஜெபியுங்கள் என்று ஆவிக் குரிய கூட்டங்கள் நடத்திய கனம் தானியேல் அவர்கள் எழுது கிறார்கள்.

6. இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை வேதாகமச் சங்கம்.

1954-வருஷம் டிசம்பர் மாதம் 5-ம் தேதி அட்வெண்ட் ஞாயிறு அன்று விண்ணப்பம் பண்ணுமாறு திருச்சபைகளுக்குக் கோரிக்கை

வேதாகமச் சங்கத்தின் மூன்றுவது ஆண்டில் 2,00,00,000-க்கு மேலாக வேதாகமப் புத்தகங்களும், புதிய ஏற்பாடுகளும், வேதாக மப் பகுதிகளும் அச்சிடப்பட்டு உலகமெங்கும் அனுப்பப்பட்டன. இவ்வளவு பெரிய இலக்கம் அடைவதற்காக நாம் நன்றியுள்ளவர் களாய் இருக்கவேண்டும். இதனுல் இன்னும் அநேகர் தேவ னுடைய வசனத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்களென்று நாம் அறிகிறோம். ஆனால் உலகத்தின் பெரும்பாகம் இன்னும் வேதாக மத்திற்காக காத்திருக்கிறது என்று நாம் மறந்துவிடலாகாது. ஒவ் வொரு மானிடனுக்கும் ஒரு வேதாகமம் அளிக்க குறைந்தபட்சம் நூறு ஆண்டுகளாகும். பாஷை திருப்புதலை எண்ணுவோமென்றால் இது மகா பெரிய ஒரு ஏற்பாடு. தற்காலம் சுமார் 2378 பாஷைகள் உலகத்தில் பேசப்படுகின்றன அவைகளில் 190 மாத்திரம் முழு வேதாகமங்கள் பெற்றுள்ளன. 937 பாஷைகள் வேதாகமங்களின் சில பாகங்களைப் பெற்றுள்ளன. இந்த இலக்கங்களை காணுங்கால் வேதாகமங்களுக்காக உலகம் இன்னும் வெகு வாஞ்சையாய் காத் திருக்கிறதென்று துலாம்பரமாய் அறிகிறோம்.

உலகம் முழுமையும் கொண்டாடப்பட்ட மூன்றும் யூபிலியின் ஆண்டின் கடைசியில் வந்திருக்கும் நாம் இதை முக்கியமாய் ஞாப கப் படுத்திக்கொள்ளவேண்டும். வேதாகம சங்கங்களின் வேலை வளர்ந்து வருவதற்காக சந்தோஷிக்க வேண்டிய முகாந்தரம் நிச்சய மாகவே இருக்கிறது. ஆனால் அந்த வேலை 20 அல்லது அதற் கொத்த எண்ணின் சுவாதீன சங்கங்களால் மாத்திரம் நடத்த

முடியாதென்று நமக்குத் தெரியவருகிறது. இந்த சங்கங்கள் தங்களுடைய இப்பொழுதுள்ள ஏதுக்களால் வேதாகமங்களின் மேலும் மேலும் பெருகுகிற வேண்டு கோட்களுக்கு வேதாகம புத்தகங்கள் சவதரிக்க முடியாமலுள்ளன. உலகத்தின் வேதாகம தேவை கிறிஸ்தவர்களின் உத்திரவாதத்தை திருச்சபையின் விசு வாசத்தால் போருக்கழைக்கிறது சமீபகாலத்தில் அநேக சபைகள் இப்பேர்ப்பட்ட அழைப்பை எதிர்த்திருக்கின்றன. ஆனால் என் எல்லா சபைகளும் இந்த அழைப்பை தாங்கக் கூடாதென்று வினவ இடம் உண்டாகிறது. நாம் முன்னேக்கி பார்க்கும்போது தனி யாட்களாய் நாம் ஒவ்வொருவரும் உலகத்தின் வேதாகம தேவை யை நிராகரிக்க உழைக்கிறோமோ என்று நம்மை சோதித்துப் பார்ப் போம். ஆம்; அடுத்த யூபிலிவரை வேதாகமத்தை கிறிஸ்தவ மக்கள் பரவச்செய்ய இது முக்கியமான முன்னேக்கயாய் நாம் வைத்து பிரயாசிக்க வேண்டும்.

இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை வேதாகம சங்கத்தின் வேலையைப் பார்த்து களிகூறும நாம் அந்த வேலையின் முன்னேற் றத்திறகாக பண உதவி செய்யவும், ஜெபத்தாலும், நன்கொடையா லும் அதன் எண்ணத்தை நிறைவேற ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

அறுப்புக்குத் தயாராயிருக்கும் இடங்களுக்கு வேலையாட்களை அனுப்புமாறு தேவனிடத்தில் நாம் இவைகளை சந்தோஷமாய் படைப் போமாக. நாம் "இதோ! அடியேன்! என்னை அனுப்பும்" என்று சொல்லும் போதுதான் இப்படிச் செய்யக்கூடும்.

சிறுவர் பாகம்

(கனம் தவமணி ஐயர், மண்டபம் கேம்பு)

1 சத்தியத்தைக்கேட்டு உணர்ந்துகோள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை, ஆராதனைக்குப்போய்த் திரும்பிவந்த வேலைக்காரனிடம் எஜமான் "இன்று ஆராதனை எப்படியிருந்தது"? என்று கேட்டார். அதற்கவன் "பிரசங்கம் மிகவும் நன்றாயிருந்தது" என்றான் "பிரசங்க வாக்கியம் எது?" என்றார் எஜமான். "நான் போகுமுன் பிரசங்கம் ஆரம்பித்துவிட்டது" என்றான் வேலைக்காரன். 'பிரசங்கத்தின் முடிவாக என்ன சொன்னார்?' என்று கேட்டார் எஜமான். "பிரசங்கம் முடியுமுன் வந்து விட்டேன்" என்று சொன் னான் அவ்வேலைக்காரன். அப்படியானால் "பிரசங்கத்தின் மத்தியில் என்ன சொன்னார்" என்பதையாவது சொல் என்றார் அந்த எஜமான் "அச்சமயத்தில் அசந்து தூங்கிவிட்டேன்" என்று சொன்னான் அந்த வேலைக்காரன்.

பிரசங்கத்தைப்பற்றி மற்றவர்களிடம் மெச்சிப்பேசும் அநேகருடைய காரியம் இப்படித்தான். பிரசங்கியின் சத்தத்தைமட்டும் கேட்கிறார்களே தவிர பிரசங்கி உணர்த்தும் சத்தியத்தைக் கேட்கிறதுமில்லை. அதை உணர்ந்துகொள்ளுகிறதுமில்லை.

இதை வாசிக்கும் சிறுவனே! சிறுமியே! ' நீ தேவாலயத்திற்குப் போகும்போது" அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிரு.

2. கிறிஸ்தவ ஈகை

1. ஒரு சபையில் கோயிலுக்கு ஒழுங்காகப்போகும் தனவந்தர் ஒருவரிருந்தார். அவர் வழக்கமாய்ப் போடும்காணிக்கை காலணாத்தான். ஒருநாள் காணிக்கை வாங்கப்படுகையில் அவசரத்தில், காலணாவுக்குப்பதிலாக அரைரூபாய் நாணயத்தை எடுத்து காணிக்கைத் தட்டில் போட்டார். தட்டில் அது விழுந்தபோது அதைத்திரும்ப எடுத்துக்கொள்ளும்படியாகக் கையை நீட்டினார். காணிக்கை வாங்கியவர் மெல்லியகுரலில் "காணிக்கைத்தட்டில் கைபோடலாகாது; அது கர்த்தருடைய பங்கில் சேர்ந்துவிட்டது'' என்றார். உடனே காணிக்கைபோட்டவர், அப்படியானால் பரலோகத்தில் அதன் பலன் மிகுதியாயிருக்கும்" என்று சொன்னார். "அதெப்படி? நீர் போட்டபோது, காலணாவாக நினைத்துத்தானே அதைப்போட்டீர். ஆகையால் எட்டணாவுக்கல்ல காலணாவுக்குரிய பலன்தானே கிடைக்கும்" என்றார் காணிக்கைவாங்கின உதவிக்காரன்.

கர்த்தருக்குரிய காணிக்கை காலணாத்தான் என்றுநினைக்கும் தனவந்தரும் மற்றவர்களும் நம் சபைகளில் உண்டல்லவா? இரண்டு காசு போட்ட ஏழைவிதவையின் காணிக்கையை ஆண்டவர் புகழ்ந்து பேசினதின் காரணம் தன் ஜீவனத்துக்குண்டான எல்லாவற்றையும் போட்டுவிட்டதினாலேயேதான் (லூக். 21:2-4)

நீங்கள் தேவாலயத்துக்குப் போகும்போது "கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து அவருடைய பிரகாரங்களில் பிரவேசியுங்கள்" (சங். 96:8)

2. ஒரு சீமாட்டி தன் தோட்டம் நிறைய ரோஜாச் செடிகளை வைத்து அதிக அருமையாக வளர்த்து வந்தாள். அதற்காக வேலைக்காரருக்கு விசேஷித்த சம்பளமும் கொடுத்து வந்தாள். தோட்டக்காரர்களும் கவனமாக வேலைசெய்து வந்த படியால் பூக்கும் காலம் வந்தபோது தோட்டம் முழுவதும் பூக்களால் நிறைந்து சொல்ல முடியாத வாசனை வீசிற்று. அப்பூந்தோட்டத்திற்காக அவ்வளவு பாடுபட்டு பணமும் செலவுசெய்து வந்தும், தினந்தோறும் இரண்டு

கூடைகள் நிரம்பப் பூக்களை அறுத்துத் தோட்டவாசலில் வைத்து வழிப்போக்கர் ஆளுக்கோர் பூவை எடுத்துக் கொள்ளலாம் என்று விளம்பரம் எழுதி வாசலில் போட்டு வைத்தார்கள் இப்படிச் செய்து வருவதைக் கவனித்த ஒரு பெரிய மனிதன் " அம்மா ! உங்கள் தோட்டத்திலுள்ள பூக்களை இவ்விதமாக வீணும் பண்ணிவிடுகிறீர்களே! அந்தத்தோட்டத்தின் அலங்காரத்தைப் பார்க்க ஜனங்கள் அந்நிய இடங்களிலிருந்தும் வருகிறார்களே! தினந்தோறும் இரண்டுகூடை பூக்களை நஷ்டம் பண்ணுகிறீர்களே! என்று கேட்க அதற்கு அந்த அம்மாள் 'ஐயா அப்படியல்ல, அறுக்க அறுக்க அதிக மொக்குகள் உண்டாகும் என்பது எனக்குத் தெரியும், அறுக்காவிட்டால் பூப்பது குறைந்துவிடும், அறுத்தாலோ அதிகப் பூக்கள் பூக்கும்' என்றாள். "கொடுங்கள்...... கொடுக்கப்படும்" (லூக். 6 : 38) கொடுக்கிறதே பாக்கியம் (அப். 20 : 35)

2. ஒரு சமயத்தில் மூன்று பெண்கள் தங்களில், யாருடைய கை அதிக அழகுள்ளதென்பதைப் பற்றி வாக்குவாதம் பண்ணிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருத்தி தன் விரல்களில் விலையேறப்பெற்ற மோதிரங்களை அணிந்திருந்தாள். அவள் தனது கையே அழகுள்ளது என்றாள். மற்றொரு பெண் தன் விரல்களில் (நகங்களில்) சிவப்பு வர்ணமிட்டிருந்தாள். அவள் தனது கையே அழகுள்ளதென்றாள். மற்றவள் தன் கையைப்பற்றி எதும் பேசாமல் அமர்ந்திருந்தாள். அச்சமயம் அருகில்நின்ற ஒரு ஏழைக்கிழவி அவர்களிடம் பிச்சைகேட்டாள். தன் கையைப் பற்றி புகழ்ந்து பேசாத பெண் அக்கிழவிக்கு தன்னால் இயன்றதைக் கொடுத்தாள். அப்பொழுது அக்கிழவி அப்பெண்களைப் பார்த்து "மோதிரங்கள் அணிந்த கையல்ல, சிவப்புவர்ணம் பூசப்பட்ட கையுமல்ல, ஏழைக்குக் கொடுத்த கையே மிகவும் அழகான கை" என்று சொல்லித் தூதனாகத் தோன்றி மறைந்தாள்.

பிரசங்கக் குறிப்புகள்

(கனம் தவமணி ஐயர், மண்டபம் கேம்பு)

" கர்த்தருடைய நாமத்திற்குப் பயப்படுகிறவர்களின் சுதந்தரம்"

"தேவனே, உமது நாமத்திற்குப் பயப்படுகிறவர்களின் சுதந்தரத்தை எனக்குத் தந்தீர்" (சங்.6 : 15)

1. ஜீவன் கிடைக்கும்: " கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது" (நீதி. 19 : 23) கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று (நீதி. 14:27) 'கர்த்தருக்குப் பயப்படுதல் ஆயுசு நாட்களைப்பெருகப் பண்ணும், (நீதி. 10:27)

2. பாதுகாப்புக் கிடைக்கும்: "கர்த்தருக்குப் பயப்படுகிறவனைத் தீமை அணுகாது" (நீதி. 19 : 23) கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப்பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார் (சங். 34 : 7)

3. இரக்கம் கிடைக்கும்: "கர்த்தருடைய இரக்கம் அவருக்குப் பயந்தவர்களுக்குத் தலைமுறைதலைமுறைக்கும் உள்ளது' (லூக். 1:50) 'தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்' (சங். 103 : 13) பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. (சங் 103 : 11 ; 17)

4. சகல நன்மைகளும் கிடைக்கும்: கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு இரட்சிக்கிறார் (சங் 145 : 19) கர்த்தருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது. (சங். 85 : 9) கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ. அவன் ஆத்துமா நன்மையில் தங்கும், அவன் சந்ததி பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளும் (சங் 25 : 13) தேவனுக்கு அஞ்சி அவருக்கு முன்பாக பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் (பிர. 8 : 12) அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை (சங் 34 : 9) தமக்குப்பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்' (சங். 147 : 11) கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். (சங். 110 : 10) கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார். (சங். 25 : 14 ; 25.12) 'இதோ கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான், (சங். 128 : 1-4) கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார்.' (சங் 115 : 13)

ஆதலால்

"நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு" நீதி. 23 : 17
'கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? (வெளி. 15 : 4).

இயேசுவின் ஜெபப்பள்ளி

பதின்மூன்றும் பாடம்

ஜெபமும் உபவாசமும்

அல்லது

அவிசுவாசமாகிய நோய்க்கு ஓர் அருமருந்து

"அப்பொழுது சீஷர்கள் இயேசுவினிடத்தில் தனித்துவந்து, அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று? என்று கேட்டார்கள். அதற்கு இயேசு, உங்கள் அவிசுவாசத்தினாலேதான்; கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால், *நீங்கள்* இந்த *மலையைப்பார்த்து, இவ்விடம் விட்டுப்புறப்பட்டு அப்புறம்* போ *என்று சொல்ல, அது அப்புறம்போம்;* உங்களால் கூடாத காரியம் ஒன்றும் இராது *என்று,* மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு *கிறேன். இந்த* ஜாதிப்பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமே *யன்றி, மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார்."* (மத். 17 : 19-21)

சந்திரரோகியான பையனைப் பிடித்திருந்த அசுத்த ஆவியை இயேசுநாதர் *துரத்தினர். அதைச் சீடர்கள் கண்டு ஆச்சரியம் அடைந்து, ஆண்டவரை நோக்கி, "ஏன் அந்த அசுத்த ஆவியை எங்களால் துரத்தமுடியவில்லை?"* என்று கேட்டார்கள் *அதற்கு முன், சகல அசுத்த ஆவிகளையும் துரத்தவும், சகல நோய்களையும் குணமாக்கவும், அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் ஆண்டவர் கொடுத்திருந்தார்.* (மத் 10 : 1) *அவர்கள் அந்த வல்லமையை உபயோகித்தபோது, எத்தனையோ பிசாசுகள் அவர்களுக்குக் கீழ்ப் படிந்தன. அதைப்பற்றி அவர்கள் ஆண்டவரிடம் சந்தோஷமாய்ச் சொன்னார்கள் ஆயினும், மறுரூபமலையில் ஆண்டவர் இருந்தபோது, அவர்கள் அவ்விதம் செய்யமுடியாமல் தோல்வி அடைந்தார்கள். ஆனால் இயேசுவந்து, அந்தப் பிசாசை அதட்டினபோதோ, அது அந்தப் பையனை விட்டுப்புறப்பட்டுப் போனது, "எங்களால் ஏன் கூடாமற்போயிற்று?" என்று சீடர்கள் கேட்ட கேள்வியால் மூன்று விஷயங்களை அறியலாம். அவையாவன:* (1) *ஆண்டவர் செய்தது போலவே அவர்களும் செய்ய விரும்பினார்கள்.* (2) *ஆண்டவர் நாமத்தை உச்சரித்தார்கள்.* (3) *அசுத்த ஆவி நீங்கும்படி ஆணை யிட்டார்கள். ஆயினும் அவர்களுடைய முயற்சிகள் வீணாயின. ஆகையால் ஏராளமான ஜனங்களுக்கு முன்னால் தோல்வியடைந்து தலை குனிந்தனர்.*

அவர்கள் தோல்விக்கு அவர்கள் அவிசுவாசமே காரணம் என்று ஆண்டவர் பதில் சொன்னர். ஆண்டவர் வெற்றிபெற்றதற்கும், அவர்கள் தோல்வி உற்றதற்கும் காரணம், சீடர்களால் அடையமுடியாத வல்லமை ஆண்டவருக்கு இருந்தது என்பதன்று. அதற்குக் காரணம் வேறு கடவுள் இராஜியத்திலும் அந்தகாரத்தின் இராஜியத்திலும் சகலத்தையும் கீழ்ப்படியச்செய்ய ஒரே ஒரு வல்லமைதான் உண்டு. அப்படிப்பட்ட ஒரே ஒரு வல்லமை விசுவாசமேயாம். ஆத்மீக உலகில், தோல்விக்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. விசுவாசக் குறைவே அந்தக்காரணம. இதனை ஆண்டவர் சீடருக்கு அடிக்கடி கூறிவந்திருக்கிருர் தெய்வீக வலலமை மனிதனுக்குள் பிரவேசித்து அவன் மூலம கிரியை செய்யவேண்டுமாளுல் மனிதன் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் பல உண்டு. அவற்றுள் முக்கியமான நிபந்தனைகளுள் ஒன்று விசுவாசம். ஊனக் கண்ணல் காணமுடியாத கடவுள் மனிதனுக்குள் ஆட்சி செய்வதற்கு இடம் கொடுப்பது அவனுடைய விசுவாசமே மனிதன், தன் சித்தத்தைக் கடவுள் ஆட்சிக்கு ஒப்புக்கொடுப்பதும், கடவுள் சித்தத்தால் மனிதன் உருவாக்கப்படுவதும அந்த விசுவாசத்தால்தான். பிசாசுகளைத்துரத்தும் வல்லமை பெற்றிருந்த சீடர்கள், அந்த வல்லமையை அழியாத நித்திய நன்கொடை என்று எண்ணவில்லை (1) கிறிஸ்துவில் இருக்கும் வல்லமையை மனிதன் பெறுவது (2) அதனை மனிதன் தனக்கே ஆதீனமாக்கிக் கொள்வது (3) கிறிஸ்துவை உயிருள்ள விசுவாசத்தால் பற்றிக்கொள்வது (4) விசுவாசத்தின் மூலமாக அவ்வல்லமையைப் பயன்படுத்தல் ஆகிய இந்நான்கும் விசுவாசிகளுக்கேற்பட்ட முதற்கடமைகள். "அவரே ஆத்மீக உலகின் ஆண்டவர், அவரே வெற்றி அரசு" என்று அவருக்குள் முழு விசுவாசமுடையவர்களாகச் சீடர்கள் இருந்திருந்தால், அவர்களுக்கு நிச்சயமாக வெற்றி கிடைததிருக்கும். உலகில் திருச்சபையின் தோல்விகளுக்கும், பலவீனத்திற்கும் திருச்சபையின் அவிசுவாசமே காரணம். "உங்கள் அவிசுவாசத்தினுல்தான்" என்று ஆண்டவர் சீடருக்குச் சொன்ன விடை, நமது தோல்விக்கும், பலவீனத்திற்கும் ஒரே சமயத்தில் காரணமும் கண்டனமும் ஆகும். ஆண்டவர் அப்படிச்சொன்னது, அன்றைக்கு, அச்சமயத்திற்கு, அச்சீடருக்கு, அந்நிகழ்ச்சிக்கு மட்டுமன்று அது இன்றைக்கும், என்றைக்கும, எக்காலத்திற்கும் நமது தோல்விகளுக்கும், பலவீனத்திற்கும் ஆண்டவர் கூறுகிற காரணமும் கண்டனமும் ஆகும் என்றுணர்வோமாக.

அப்படியாளுல் விசுவாசக் குறைவிற்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும் அல்லவா? "எங்களால் ஏன் கூடாமற் போயிற்று?" என்று சீடர்கள் கேட்டதைப் பார்க்கிலும், "நாங்கள் ஏன் விசுவாசிக்க முடியவில்லை? இதற்குமுன் விசுவாசத்தினுல், எத்தனையோ

பேய்களைத் துரத்தியிருக்கிறோமே, இப்போதுமட்டும் நாங்கள் ஏன் விசுவாசிக்கத் தவறிப்போனோம்?" என்று அவர்கள் கேட்டிருக்க வேண்டும். ஆயினும் நமது சிந்தனைகளை அறிந்திருக்கும் ஆண்டவர் அவர்கள் இப்படிக் கேட்பதற்கு முன்னமே பதில் சொல்லத் தொடங்குகிறார். "இப்படிப்பட்ட பிசாசு ஜெபத்தாலும், உபவாசத்தாலுமேயன்றி, மற்றெதனாலும் போகாது" என்கிறார் எவ்வளவுக்கெவ்வளவு விசுவாசம் இலேசாயிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு ஆத்மீக வாழ்வும் கடினமாயிருக்கிறது. கடவுளுடைய ஆவியைப் பெறுவதற்காக, விசுவாசி ஒருவன் அவன் ஆவியை அவருக்கு ஒப்புக்கொடுக்கிறான். அப்படி அவன் செய்தால், மகா பெரிய வல்ல செயல்களைச் செய்யும் அளவிற்கு அவனுடைய விசுவாசம் பலம் பெறுகிறது. ஒருவனது ஆத்மீக நிலைமையையே விசுவாசம் முழுவதும் சார்ந்திருக்கும். ஒருவனது விசுவாசம் பலமாயிருக்கும்போதும், கடவுளுடைய ஆவி அவன் வாழ்க்கையின்மேல் முழுச்செல்வாக்குடையதாயிருக்கும்போதுமே, பலத்த கிரியைகளைச் செய்யத்தக்க வல்லமையை விசுவாசம் பெறுகிறது. இக்காரணம்பற்றித்தான், ஆண்டவர் "இவ்விதப் பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி, மற்ற எவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது" என்று சேர்த்துச் சொல்லுகிறார். அதாவது (1) கடவுளோடு நெருங்கி ஐக்கியப்பட்டு வாழ்தல். (2) ஊனக்கண்ணுக்குப் புலப்படுகிற இக்காட்சி உலகைவிடல் (3) ஞானக்கண்ணுக்கே புலப்படுகிற கருத்துலகாகிய ஆத்மீக வாழ்விற்குள் பிரவேசித்தல் (4) ஜெபத்திலும் உபவாசத்திலும் தம் வாழ்க்கையைச் செலவிடல் ஆகிய இந்நான்கு படிகளையும் எந்த விசுவாசி வாழ்க்கையின் வழியாகப் பின்பற்றிநடக்கிறானோ அந்த விசுவாசிக்கே அல்லாமல் வேறெவருக்கும், இப்படிப்பட்ட முரட்டுத்தனமான பிசாசு கட்டுப்படாது என்று ஆண்டவர் விளக்குகிறார். ஆகையால் ஜெபத்தைப்பற்றி இரண்டு முக்கிய போதனைகளை நமக்கு ஆண்டவர் அருளுகிறார். ஜெபஜீவியம் இல்லாமல் விசுவாசம் உண்டாகாது வளர்ச்சியுமடையாது பலமும் பெறாது என்பது ஒரு போதனை. ஜெபஜீவியமானது, முழுமையும் பூரணமுமான விருத்தியை அடைவதற்கு, உபவாசம் இல்லாமல் முடியாது என்பது மற்றொரு போதனை.

விசுவாசம் முழுவளர்ச்சியடைய வேண்டுமானால், ஜெபஜீவியம் மிகமிகத்தேவை. பலபிரிவுகள் அடங்கிய ஆத்மீக வாழ்க்கையில், ஒவ்வொரு பிரிவும் காரணமாகவும் காரியமாகவும் இருக்கிறது. அதாவது ஒவ்வொன்றிலும் செயலும் எதிர்செயலும் உண்டு. இவை விசுவாசத்தினால் ஏற்படுவதாகும். விசுவாசம் இல்லாத மெய் ஜெபமே கிடையாது. எந்த ஜெபத்திற்கும் முன்கூடியே ஓரளவு விசுவாசம் இருக்க வேண்டும். என்றாலும், விசுவாசத்தை அதிகரிப்பதற்கு

ஜெபமும் ஒரு வழியே. அதிக விசுவாசத்திற்கு அதிக ஜெபம் தேவை. இக்கருத்தையே ஆண்டவர் இங்கு வற்புறுத்துகிறார்.

விசுவாசத்தைப் போல வளரவேண்டியது வேறு ஒன்றும் இல்லை. "உங்கள் விசுவாசம் அதிகமாய் வளர்ந்திருக்கிறது" என்று ஒரு சபையைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அது எங்கே? எப்போது? யாரால்? என்று வேதத்தில் காண்க. "உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது" என்று ஆண்டவர் சொன்னபோது, பரம இராஜ்யத்தின் பிரமாணத்தையே விளம்பரப் படுத்தினார். எல்லாருக்கும் ஒரே அளவான விசுவாசம் இல்லை. ஒரு ஆளுக்கு எப்போதும் ஒரே அளவான விசுவாசம் இல்லை. ஒருவருக்கிருக்கும் வல்லமை இவ்வளவென்றும், ஆசீர்வாதம் இவ்வளவென்றும் தீர்மானிப்பது அவனது விசுவாச அளவேயாகும் என்பதே அப்பிரமாணம் எங்கே? எப்படி? நமது விசுவாசம் வளரவேண்டும் என்று அறிய நாம் விரும்பினால், அதற்கு விடையாக ஆண்டவர் கடவுளுடைய சிம்மாசனத்தைச் சுட்டிக் காண்பிக்கிறார். ஜெபத்தில் நாம் வைத்துள்ள விசுவாசத்திலும், ஜீவனுள்ள தேவனோடு நாம் கொள்ளும் ஐக்கியத்திலுமே நமது விசுவாசம் அதிகரிக்கும். விசுவாசம் என்ற பயிர் உயிருடனிருந்து கனி தர வேண்டுமானால், அதற்குக் கடவுளின் வற்றாத ஜீவ நதி தேவை. விசுவாசிக்கும சக்தி நமக்குள் விருத்தியடைவதற்கு நாம் செய்ய வேண்டியவை மூன்று (1) கடவுளை வழிபடல் (2) கடவுள் மீதும், கடவுளுக்காகவும் காத்திருத்தல் (3) கடவுள் நமக்கு வெளிப்படுத்தும் படி கடவுளிடத்தில் நம்மைக் கொடுத்தல் என்பவைகளே. கடவுளருளிய வேதவசனங்களை அவருடைய பாதத்தில் வைக்கவேண்டும். அவற்றை அவரே பேசும்படி கேட்கவேண்டும். அப்பொழுதுதான் வேத வசனங்கள் அவருடைய சொந்த வார்த்தைகள் என்று விசுவாசிக்கிற வல்லமை நமக்குக்கிடைக்கும். ஜெபத்தாலும், கடவுளோடு நாம் கொள்ளுகிற ஐக்கியத்தாலும், விசுவாசம் வலிமையடையும் "அதிக ஜெபம், அடிக்கடி ஜெபம், அதிக நேரம் ஜெபம்" என்று போதிக்கப்படுகிற பல கிறிஸ்தவர்கள் அவற்றின் மெய்ப் பொருளை விளங்கிக்கொள்வதில்லை கடவுளோடு அதிக நேரம் தரித்திருப்பதின் அவசியத்தையும் அவர்கள் உணர்வதில்லை. ஆண்டவர் இங்கு வற்புறுத்தும் போதனையின் சாரம், அவருடைய பக்தர்கள் பலரின் அனுபவங்களில் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில் அதிகநேரம் ஜெபிக்கிறவர்களே பலத்த விசுவாசம் உடையவர்களாக இருக்கிறார்கள்.

இது ஆண்டவரிடம் நாம் கற்றிருக்கிற பழையபாடம் ஒன்றை நமக்கு நினைப்பூட்டுகிறது. "நாம் கேட்பதைப் பெறுவோம் என்று நம்புங்கள்" என்று சொல்லுமுன் "கடவுளில் விசுவாசம் வையுங்

கள்" என்று சொன்னார். ஜீவனுள்ள தேவனாகிய கடவுளிலேயே நமது விசுவாசம் ஆழமாக ஊன்றி, அகன்று வேர் ஊன்றவேண்டும். அப்பொழுதுதான் மலைகளைப் பெயாக்கவும், பேய்களைத் துரத்தவும் தக்கதாக நமது விசுவாசம் பலமடையும். "உங்களுக்கு விசுவாசம் இருந்தால் உங்களால் கூடாதது ஒன்றும் இராது" என்றார் அல்லவா? இவ்வுலகில் கடவுள் நமக்குக் கட்டளையிட்டிருக்கும ஊழியத்தில் பெயர்த்தெறியவேண்டிய பெருமலைகளும் துரத்தவேண்டிய பெரும் பேய்களும் இருக்கின்றன.

கிறிஸ்து இயேசுவே நமது உயிர். அவரே நமது விசுவாசத்தின் உயிரும் கூட. அவரது உயிரே நம்மை பலப்படுத்துகிறது, விசுவாசிக்கச் செய்கிறது. தான் என்னும அகங்காரம் சாகவேண்டுமானால் அதிக ஜெபம அவசியம். இயேசுவோடு நெருங்கிய ஐக்கியத்தில்தான் விசுவாசத்தின் ஆவி வல்லமை பெற்று விளங்கும். விசுவாசத்தின் முழுவளர்ச்சிக்கு ஜெபம் இல்லாமல் முடியாது.

ஜெபத்திற்கு உபவாசம் அவசியம். இதுதான் நமக்கு ஆண்டவர் கற்பிக்கும் இப்பாடத்தின் இரண்டாம பிரிவு. கண்ணுக்குத் தோன்றாத ஆத்மீகப் பொருளைப் பற்றிப் பிடித்துக்கொள்ளும் ஒரு கை ஜெபம், கண்ணுக்குத் தோன்றும் காட்சி உலகை விட்டு விடுகிற மறு கை உபவாசம். காட்சி உலகாகிய இதில் உணவைத் தேடுவதிலும், அதைப் புசித்து ஆனந்தம் கொள்வதிலும் மனிதன் மகிழ்கிறான். உணவுக்குரிய இனிய கனியினாலேயே மனிதன் சோதிக்கப்பட்டு, ஏதேன் தோட்டத்தில் வீழ்ச்சி அடைந்தான். ஆண்டவர் வனாந்தரத்திலே நாற்பது நாள் உபவாசமிருந்த போதுதான் கற்களை அப்பங்களாக்கிக் கடும்பசி தீர்த்துக கொள்ளும்படி சோதிக்கப்பட்டார். ஆனால் அவருடைய பெரிய உபவாசத்தினாலேயே வெற்றி பெற்றார். பரிசுத்த ஆவியின் ஆலயமாகும்படியாகவே நமது தேகம் மீட்கப்பட்டுளது. ஆவியிலும், தேகத்திலும், உண்பதிலும், குடிப்பதிலும் கடவுளை மகிமைப்படுத்த வேண்டுமென்று சத்திய வேதம் கூறுகிறது. ஆனால் பல கிறிஸ்தவர்களுக்குக் கடவுளின் மகிமைக்காக உண்பது என்பது ஒரு ஆத்மீக உண்மை என அவர்களுடைய உள்ளங்களில் உதயமாகாதது வருந்தத்தக்கது. ஆண்டவரின் வார்த்தைகளினால் உபவாசத்தைப் பற்றியும் ஜெபத்தைப் பற்றியும் எழுப்பப்படும் முதற் கருத்து யாதெனில் மிதமான, சுயவெறுப்பான, தன்னடக்கமான வாழ்க்கையிலேயே 'அடிக்கடி ஜெபிக்கும், அதிகம் ஜெபிக்கும், அதிகநேரம் ஜெபிக்கும்' வல்லமை பெருகும்.

ஆனால் அதில் இன்னும் சில கருத்துக்கள் உண்டு, துக்கமும் கவலையும் உண்டுகளிக்க இடம்தரா, ஆனால் சந்தோஷமோ, உண்பதும் குடிப்பதுமான விருந்து விழாக்கள் நடத்துகிறது. சில சம

யங்களில் உடற்பசியை உடனடியாகத் தீர்க்க வேண்டிய சந்தர்ப் பங்களும் வரக்கூடும். அப்படிப்பட்ட சமயங்களில் அது நியாய மானதாயிருப்பினும் அந்தகாரத்தின் வல்லமைகளோடு செய்யும் ஆவியின் போராட்டத்திற்கு அது இடையூறுயிருக்கிறது. ஆகை யால் பசியை அடக்கி ஆளவேண்டியது அவசியமாகிறது. நாம் புலன்களால் ஆகிய சிருஷ்டிகள். புலன்கள் நமது அறிவின் பலகணிகள் அல்லது வாயில்கள். காட்சிப் பொருள்கள் மூலமாகவே நமது மனம் வேலை செய்கிறது கடவுள் இராஜ்யத்திற்காக நாம் நாடுவதை அடைவதற்கு, உபவாசத்தினால் இந்தப் புலன்களையே அடக்கி ஆண்டு நம்மை முற்றும் ஒப்புக்கொடுக்கிறோம் இந்த மன உறுதியை நிறைவேற்றுவதற்கு உபவாசம் உதவுகிறது. குமாரனின் உபவாசத்தையும் தியாகத்தையும் ஒப்புக்கொண்ட ஒருவன் இதனை உணர்வான். அவன் கிறிஸ்துவிற்காகவும் கிறிஸ்துவின் இராஜ்யத் திற்காகவும் சர்வத்தையும் தத்தம் செய்யத் தயாராயிருக்கும் ஆத்மீக வல்லமையால் சன்மானிக்கப்பட ஒப்புக்கொள்வான்.

ஜெபமானது அரூபப் பொருளான அமலனை எட்டி அடைய வல்லது உபவாசமோ அநித்தியமான காட்சி உலகிலுள்ள அனைத் தையும் விட்டு விடுவது திட்டவட்டமாகத் தடை செய்யப்படாதன வும் பாவமில்லாதனவும் உண்பதற்குரியவை என்று கற்பனை செய் கிறார் சில சாதாரணக் கிறிஸ்தவர். மேலும் இந்த உலகின் சொத்து, சுகம், இலக்கியம், இன்பங்கள் முதலியவற்றில் தங்களால் கூடிய மட்டும் வைத்துக் கொள்ள நாடுகின்றனர். ஆனால் கடவுள் முன் தங்களைத் தற்பிரதிஷ்டை செய்து கொண்ட கிறிஸ்தவரோ. போர்க் களத்தில் தங்களுக்குத் தேவையானதை மட்டும் எடுத்துச் செல்லும் போர் *வீரரைப்போல் இருக்கின்றனர். ஒவ்வொரு சுமையையும் அத்தகைய அடியான் தூர எறிகிறான் தன் பாவத்தை விடுகிறான். இவ்வுலக வாழ்க்கையின் வலையில் சிக்கிக் கொள்ளாதபடி கடவுளுக் கும் கடவுள் திருப்பணிக்குமே கங்கணம் கட்டிக்கொண்டு நசரேய வாழ்க்கை நடத்த நாடுகிறான். அத்தகைய சுயேச்சையான துறவு பூண்டவிடில் எவனும் ஜெபத்தில் வல்லமையைப் பெறான்.

வேத வினாக்களுக்குரிய விடைகள்

1 மத். 13 : 45-46
2 எர்மோன் மலை (9166 அடி உயரம்) சங். 133 : 3
3 எரேமியா 38 : 10-13
4 வெளி. 22 : 2
5 யாக்கோபு 3 : 1-18

6 மத் 12 : 36
7 லீதியாள்—அப். 16 : 14, 15
8 சங். - 90
9 II ராஜாக்கள் 2 : 24
10 சங். 119 (176 வசனங்கள்)
11 எண் 34 : 11 ; லூக்கா 5 : 1, யோவான் 6 : 1
12 எசேக்கியேல் 47 : 1-5

1954 கிறிஸ்து ஜயந்தி நடிப்பு

(குறிப்பு :—கிராமங்களில் கீழ்க்கண்ட கதையை எளிதில் நடிக்கலாம். பிரயாசத்துடன் இதை தயாரித்து அனுப்பிய கனம் சாண்டிலர் அம்மாள் அவர்களுக்கு நேயர்களின் நன்றி உரித்தாகுக. ப-ர்)

ஆரோன் வீட்டுக்கு வந்த ராஜாக்கள்

கதை

ஒரு கிராமத்தில் ஆடு மேய்க்கிற ஒரு நொண்டிப் பையன் தன் விதவையான தாயோடு தரித்திரத்தில் வசித்துக்கொண்டிருந்தான். வீட்டில் சாப்பிட ஒன்றுமில்லை. சகிக்க முடியாத குளிர்.

பெத்லகேமுக்குப்போன மூன்று சாஸ்திரிகள் இந்தக் குடிசைக்கு வந்து அங்கே இரவில் தங்க உத்திரவு கேட்டார்கள். பையனும் தாயும் உத்திரவு கொடுத்து இந்த ராஜாக்களின் அழகான உடுப்புகளைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள் அவர்கள் ஏதோ ஒரு சிறு குழந்தைக்கு விலையுள்ள வெகுமதிகளைக்கொண்டு போகிறார்கள் என்று உணர்ந்து அந்தத் தாய்க்குக் கோபமும் பொறாமையும் உண்டாகித் தன் நொண்டிப் பையனுக்கு ஏன் கொஞ்சம் கொடுக்கக்கூடாது என்று யோசித்தாள்.

மூன்று ராஜாக்களும் தூங்கிக்கொண்டிருந்தபொழுது அவள் போய்த் தங்கப் பொருட்களைத் திருடப் பிரயாசைப்பட்டாள். ஆனால் அவர்கள் எழும்பி அவளைப் பிடித்தார்கள். பட்டினியாயிருக்கிற என் பிள்ளைக்காகத் தான் இதைச் செய்தேன் என்றாள். ராஜாக்கள அவளை மன்னித்து அதிகப் பொறுமையோடு பிறந்த குழந்தை யார் என்று படிப்பித்து அதிகக் கவலையோடு இந்தப் புது ராஜாவின் ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படியாக ஒவ்வொரு ஆளும் அவரை நேசிக்க வேண்டுமென்று காட்டினார்கள். அந்த ஏழைத்தாய் இதெல்லாம் கேட்டுத் தங்கப் பொருட்களைத் திரும்பக் கொடுத்துப் பின்பு தானும் ஏதாவதொரு சின்ன வெகுமதியைக் கொடுக்க அதிக ஆசைப்பட்டாள். மகனுக்குத் திடீரென்று ஒரு யோசனை வந்தது. நடக்கிறதற்காக அவனுக்கிருந்த குச்சியைக் கொடுத்துவிட்டு அதிக ஆச்சரியமாய் அவன் சுகமாகிக் குச்சியில்லாமல் நடந்து ஆடினான்.

விடியற்காலம் ராஜாக்கள் புறப்பட்டபொழுது பையன் கூடவேபோக உத்திரவு கேட்டான். தாய் உத்திரவு கொடுத்தாள். பையன் ராஜாக்களோடு பெத்லகேமுக்கு இயேசுக்கிறிஸ்துவை வணங்கவும் ஸ்தோத்திரம் செலுத்தவும் போனான்.

நாடகம்

(குறிக்கப்பட்ட இடம் இரண்டாகப் பிரித்து ஒரு பக்கம் வீட்டிற்குள் இருக்கிற காட்சி. மற்றொரு பக்கம் வெளியே மலைநாட்டுக் காட்சி. பையன் வெளியே உட்கார்ந்து தன் குச்சியைக் கீழே வைத்துவிட்டுத் தன் புல்லாங்குழலை ஊதிக்கொண்டிருக்கிறான். வீட்டிற்குள் தாய் தன் வேலையைச் செய்துகொண்டிருக்கிறாள்.)

தாய்: (தன் மகனைக் கூப்பிட்டு) ஆரோன்! ஆரோன்!

ஆரோன்: என்னம்மா?

தாய்: படுக்கப்போகவேண்டும் மகனே!

ஆரோன்: வருகிறேன்! (ஆனால் வரவில்லை)

தாய்: (மறுபடியும்) ஆரோன்!

ஆரோன்: வருகிறேன் (அவனுக்கு உள்ளேபோக இஷ்டமில்லை தாய் ஜன்னலுக்கு வந்து கோபம் காட்டுகிறாள்)

தாய்: கெட்ட பையன். எப்போ கீழ்ப்படியப் போகிறாய்?

ஆரோன்: அம்மா எனக்கு விசனம். இன்னும் சிறிது நேரம் இருக்க என்னை விட்டு விடுங்கள்.

தாய்: காற்று அடிக்கிறது. உனக்குக் காய்ச்சல் வரும். இருட்டாயுமிருக்கிறது

ஆரோன்: இல்லை அம்மா. வானத்தில் வெளிச்சம் உண்டு. நிலா வரும் வரைக்கும் என்னை விட்டுவிடுங்கள்.

தாய்: (கைகளைத்தட்டி) இன்றைக்கு நிலா இல்லை. நீ சீக்கிரமாய் வராவிட்டால் உன்னை அடிப்பேன்.

ஆரோன்: சரி வருகிறேன்.
(ஆரோன் நொண்டியாகையால் நொண்டி உள்ளே நடந்து வந்து சட்டையை தொங்கவைத்து புல்லாங்குழலைப் பத்திரமாய் ஒரு மூலையில் வைத்துவிட்டு உடனே ஜன்னல் அண்டைபோய் வானத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கிறான்.)

தாய்: என்ன மகனே! ஏன் அவ்வளவு நேரம் வெளியே இருக்க உனக்கு இஷ்டம்?

ஆரோன்: அம்மா நீங்கள் வெளியே போய்ப் பார்க்கவேண்டும். நம்முடைய வீட்டிற்கு மேலே ஒரு பெரிய நட்சத்திரம் இருக்கிறது. அதற்கு ஒரு வாலைப்போல் அதிக தூரம் வெளிச்சம் தெரிகிறதே.

தாய்: மகனே! ஏன் பொய் சொல்லுகிறாய். பகலெல்லாம் சொப்பனத்தில் நடக்கிற பையனைப்போலிருக்கிறாய். இங்கே வீட்டிற்குள் விறகு ஒன்றுமில்லை. சாப்பிட ஒன்றுமில்லை. அப்பொழுது நீ உள்ளே வந்து சும்மா கதைகளைச் சொல்லுகிறாய். நீ பொய் சொல்லாதே!

ஆரோன் : அம்மா நான் பொய் சொல்லுகிறதில்லை என்னை நம்பவேண்டும். வெளியே வந்து பாருங்கள் உங்களுக்கு அப்பொழுது தான் தெரியும்.

தாய் : என்னைத் தொந்திரவு செய்யாதே. எப்படி உன்னை நம்பலாம்? தினந்தோறும் ஒரு புதுக் கதையோடு வருகிறாய். இப்பொழுது ஒரு நட்சத்திரத்திற்கு ஒரு வால் இருக்கிறது என்று சொல்லுகிறாய்.

ஆரோன் : ஆம் அம்மா, அது உண்மைதான். அவ்வளவு நீண்டவாலுண்டு (கைகளை நீட்டி அப்புறம் கிட்ட கொண்டுவந்து) ஒருவேளை— அவ்வளவு நீளம் மட்டும் ஆனால் அங்கே இருக்கிறதே.

தாய் : (மகனை அணைத்து) ஐயோ ஆரோன்! பசியினாலோ உனக்குப் புத்தியில்லை. நான் என்ன செய்வேன். நாளைக்குச் சும்மா போய்ப் பிச்சை கேட்கவேண்டும். ஐயோ, ஐயோ! என் மகன் ஒரு பிச்சைக்காரன்!

ஆரோன் : அழாதேயுங்கள் அம்மா, என்னைப்பற்றிக் கவலைப்படாதேயுங்கள். நான் பிச்சை கேட்கவேண்டுமானால் நேர்த்தியான ராகங்களை வாசித்து எல்லாரும் ஆடச்செய்வேன். நீங்கள் என்னோடுகூடவந்து பாட்டுப் பாடுங்கள். அப்பொழுது ராஜாவும் உங்கள் பாட்டைக் கேட்டுப் பணத்தைக் கொடுப்பார். படுக்கப் போகிறேன். அம்மா—கவலையில்லாமல் இருங்கள்.

(தூரத்திலிருந்து மூன்று ராஜாக்களும் ஒரு வேலைக்காரனும் ஒரு லாந்தரைத் தூக்கிக்கொண்டு மெதுவாய் வருகிறார்கள். ஆரோன் சத்தத்தைக் கேட்டுச் சன்னலுக்குப் போய் ஆச்சரியமான காட்சியைப் பார்க்கிறான். முதல் ராஜா மெல்கியோர் அவர் தங்கத்தைக் கொண்டு வருகிறார். அப்புறம் பெல்தாசார் ராஜ கையில் ஒரு கோப்பை நிறைய வெள்ளைப் போளத்தைக் கொண்டு வருகிறார். பின்னாலே காஸ்பார் ராஜா தூபவர்க்கத்தைத் தூக்கிக்கொண்டு வந்தார். வேலைக்காரன் கனமான மூட்டைகளோடு ஒரு கிளியும், ஒரு நகைப் பெட்டியையும் ஒரு கையிலே வைத்துக்கொண்டு இன்னொரு கையிலே லாந்தரை வைத்துக்கொண்டு வழியைக் காட்டினான்)

ராஜாக்கள் : இன்னும் எவ்வளவு தூரம் போகவேண்டும். ஆ, நட்சத்திரமே, காட்டவேண்டுமே. இன்னும் எவ்வளவு தூரம் போகிறது அவசியம்.

தாய் : (கட்டிலிலிருந்து) ஆரோன்! போய்ப் பார். யார் கதவைத் தட்டுகிறது?

ஆரோன் : (கதவைக் கொஞ்சம் திறந்து) அம்மா! அம்மா! சீக்கிரம் வந்து இந்தக் காட்சியைப் பாருங்கள். அப்புறம்தான் என்னை நம்புவீர்கள்.

தாய் : (கோபமாய்) என்ன தொந்தரவு இப்போ! யார் அங்கே நிற்கிறது?

ஆரோன் : அம்மா—வெளியே ஒரு ராஜா நிற்கிறார். அவர் தலைமேலே ஒரு கிரீடம் உண்டு!

தாய் : என்னடா எப்பொழுது உண்மையைப் பேசப்போகிறாய். இன்னொரு பொய் சொன்னால் உன்னை அடிப்பேன். மறுபடியும் கேளு. அங்கே யார் நிற்கிறது? அவர்களுக்கு என்ன வேண்டும்?

ஆரோன் : அம்மா! நான் முதலில் பொய் சொன்னேன். இங்கே ஒரு ராஜா இல்லை. இரண்டு ராஜாக்கள் இருக்கிறார்கள்! வந்து பாருங்களம்மா! நீங்கள் பார்க்காவிட்டால் என்னை நம்பமாட்டீர்கள்.

தாய் : மகனே! உண்மை சொல்லு அப்பொழுது உன்னை நம்புகிறேன்

ஆரோன் : இரண்டு ராஜாக்கள் இல்லை மூன்று ராஜாக்கள் இருக்கிறார்கள். ஒரு ராஜா கறுப்பு மனுஷன்.

தாய் : மகனே, உன்னை அடிக்க ஆசையாய் இருக்கிறேன். என்ன பொய்!

ஆரோன் : அப்படித்தான் சொன்னேன். என்னை நம்பமாட்டீர்கள். வாருங்கள் அம்மா.

(தாய் கதவண்டை போகிறாள். மகன் பின்னாலேயே தாயின் உடுப்பைப் பிடித்துக்கொண்டு வருகிறான். கதவைத் திறந்து ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். ராஜாக்களை வணங்குகிறார்கள்)

ராஜாக்கள் : அம்மா—கொஞ்சநேரம் உன் வீட்டிலே இளைப்பாறி உன் நெருப்புக்கிட்டே உட்காரலாமா?

தாய் : நான் ஒரு ஏழை விதவை. படுக்கிறதற்கு வைக்கோல் மட்டும் நான் கொடுக்க முடியும் என் வீட்டில் நெருப்புக்கு ஒரு குச்சியும் இல்லை.

காஸ்பார் : (காது கேட்காமல்) என்ன சொல்லுகிறாள்?

பெல்தாசார் : வரலாம் என்று சொல்லுகிறாள்.

எல்லாரும் : சந்தோஷம் அம்மா! அதிக சந்தோஷம்.

தாய் : வாருங்கள், வாருங்கள்!

(அதிக மரியாதையுடன் தாய் தன் மகனை இழுத்துக்கொண்டு எல்லாருக்கும் இடம் கொடுக்கப் பிரயாசைப்படுகிறாள். வேலைக்காரன் முதலாவது பிரவேசித்து மூட்டைகளைக் கீழே வைக்கவேண்டும். அப்புறம் ஓடி காஸ்பார் ராஜாவின் நீள அங்கியைப் பிடித்துத் தூக்கி அந்த ராஜாவை மெதுவாய் ஒரு பெஞ்சியின் மேலே உட்காரச் செய்கிறான். பெல்தாசார் உள்ளே பிரவேசித்துக் காஸ்பார் பக்கமாய் உட்கார்ந்தார். மெல்கியோர் கடைசியில் நுழைந்து அதே பக்கமாய் உட்கார்ந்தார். வேலைக்காரன் அவர்களுக்கு முன்பாக ஒரு அழகான கம்பளத்தை விரித்து அதின்மேல் குழந்தைக்குக் கொண்டுவந்த வெகுமதிகளை வைக்கிறான் தாய்க்கு அதிக ஆச்சரியம்.)

மெல்கியோர்: (சுற்றி எல்லாவற்றையும் கவனித்து) இங்கே நன்றாய் இருக்கிறது!

தாய்: ஐயோ! இங்கே விறகு ஒன்றும் இல்லை. நான் உடனே போய்க் கொஞ்சம் பொறுக்கி வருகிறேன்.

மெல்கியோர்: கொஞ்சநேரம் மட்டும் இருப்போம். அந்த நட்சத்திரத்தைக் கவனிக்கவேண்டும்.

தாய்: நட்சத்திரம்! என்ன நட்சத்திரம்.?

ஆரோன்: அம்மா—நான் உங்களுக்கு என்ன சொன்னேன்.

தாய்: பேசாதே!

மெல்கியோர்: இன்னும் அதிக தூரம் நாங்கள் போகவேண்டும்.

தாய்; பொறுத்திருங்கள். நான் உடனே வருகிறேன் மகனே! தொந்திரவு செய்யாதே

(தாய் வெளியே போனவுடனே ஆரோன் பெல்தாசார் பக்கத்தில் போய் நிற்கிறான்.)

ஆரோன்: நீங்கள் உண்மையாய் ஒரு ராஜாதானா?

பெல்தாசார்: உண்மைதான் மகனே.

ஆரோன்: ராஜாவின் ரத்தம் உங்களுக்கு உண்டா?

பெல்தாசார்: ஆம் என் ரத்தம் ராஜாவின் ரத்தம்.

ஆரோன்: நான் அதைப் பார்க்கலாமா?

பெல்தாசார்: உன் ரத்தத்தைப்போலிருக்கிறது மகனே.

ஆரோன்: அப்பொழுது அது என்ன பிரயோஜனம்.

பெல்தாசார்: நிஜந்தான், அதற்குப் பிரயோஜனமில்லை.

ஆரோன்: உங்கள் வீடு எங்கே ராஜாவே?

பெல்தாசார்: நான் ஒரு பெரிய வர்ணக்கல் மாளிகையில் வசிக்கிறேன். அங்கே புலிகளும் அநேக வெள்ளைப் புறாக்களும் உண்டு. ஆனால் நீ இங்கே என்ன செய்கிறாய்?

ஆரோன்: (விசனத்துடன்) நான் ஒரு மேய்ப்பன். எனக்கு அநேக ஆடுகள் இருந்தன. ஆனால் என் தாய் இப்பொழுது அந்த ஆடுகளை எல்லாம் விற்றுவிட்டார்கள். கடைசியாக எனக்கு ஒரே ஒரு வெள்ளாடு இருந்தது. அது எனக்கு எவ்வளவோ நல்ல பால் கொடுத்தது. அதுவும் இப்பொழுது இல்லை. செத்துப் போய்விட்டது. இப்பொழுது நானும் என் தாயும் சும்மா சுற்றிப்போய் பிச்சை கேட்கப் போகிறோம். எனக்குச் சந்தோஷம்.

பெல்தாசார்: சந்தோஷம்தானா!

(ஆரோன் பெல்தாசாரைவிட்டுக் காஸ்பாரைப் பார்க்கப் போனான். காஸ்பார் அவர்கள் கொண்டுவந்த கிளிக்கு ரொட்டி கொடுத்துக்கொண்டிருந்தான்.)

(தொடரும்)

இரக்ஷணிய மனோகரம்—குமாரநுபூதி (தொடர்ச்சி)

19 தேடும்படி உம்பர் திகர்ந்தம் எலாம்
ஓடும் தமியேன் உளமா உனையே
நாடும்படி ஓர்வரம் நல்கி உயர்.
வீடும் தருவாய் அருள் வித்தகனே.

உம்பர்—மேலை உலகத்திலும்; திக்கு அந்தம்—எட்டுத்திக்குகளின் எல்லை வரைக்கும்; தேடும்படி = சுகபோகங்களைத் தேடும்படி; ஓடும் தமியேன் உளம் மா—அலைகின்ற அடியேனின் மனமாகிய குதிரை; உனையே நாடும்படி ஓர் வரம்—உனையே நாடும்படியான் ஒருவரத்தை; நல்கி—ஈந்து; உயர் வீடும் தருவாய்—மேலான மோக்ஷத்தையும் தருவாயாக; அருள் வித்தகனே—அருள் நிறைந்த ஞானசொரூபியே.

20. படியேன் கனியேன் பணியேன் விழிநீர்
வடியேன் ஒருநாள் மறவேன் மறம் நான்
கொடியேன் எனினும் குமரேச உனக்கு
அடியேன் அடியேன் அருள் வித்தகனே.

படியேன்—வேதத்தைக் கற்று அதற்குக் கீழ்ப்படியேன்; கனியேன்—உள்ளம் கசிந்து உருகேன்; பணியேன்—உன்னை வணங்கேன் விழிநீர் வடியேன்—பக்தியால் கண்ணீர் சிந்தேன்: ஒருநாள்—ஒருநாளாவது; மறம் மறவேன்—பாவத்தை மறவேன்; கொடியேன் எனினும்—நான் சண்டாளம் ஆனாலும்: குமர + ஈச—குமாரக் கடவுளே; (நான்) உனக்கு அடியேன்; வித்தகனே—ஞானசொரூபியே; அருள்—அருள்புரிவாயாக

21 நஞ்சத்தை நிகர்த்து எனை நாளும் நலி
நெஞ்சத்தை அடக்கல் நினக்கு அரிதோ
கஞ்சத்தை நிகர்த்த கழல் துணையால்
வஞ்சத்தை அடக்கிய மாதவனே.

நஞ்சத்தை நிகர்த்து—நஞ்சை ஒத்து; எனைநாளும் நலி—எனை என்றும் வருந்துகின்ற; நெஞ்சத்தை அடக்கல் நினக்கு அரிதோ—என் நெஞ்சை அடக்குதல் உனக்கு அரிதோ; கஞ்சத்தை நிகர்த்த—தாமரை மலரை ஒத்த; கழல் துணையால்—இரு திரு அடிகளால்; வஞ்சத்தை அடக்கி—வஞ்சகம் புரியும் பேயை அடக்கின; மாதவனே—மதுரமானவனே—அடியார்க்கினியானே

22 என்நீதி எனச்சொல யாதும் இலேன்
உன் நீதி அடைந்து எனது ஆவி உய
இன்னே திரு உளம் இரங்குதி ஆல்
மன்னே அருள் பொங்கு மகோததியே

என் நீதி என்று சொல்ல ஒன்றும் இல்லேன் நான் ; உன் நீதியைப் பெற்று ; எனது ஆவி உய=எனது ஆத்துமா உய்ய (பிழைக்க) ; இன்னே=இப்பொழுதே ; திரு உளம் இரங்குதி (இரங்கு) ; ஆல்—அசை ; மன்னே=அரசே ; மகோததியே= மகா + உததியே = அருள் பொங்கும் பெரிய கடலே.

23 நீர் இன்று அமையாது உலகத்து நெறி ;
வேர் இன்று அமையாது வியன் தரு ; நின்
பேர் இன்று அமையாது பிறங்கு கதி
ஆர் இன்று எனை மீட்பர் அரும்பொருளே

உலகத்து=உலகில் ; நீர் இன்று = நீர் இன்றி ; நெறி அமையாது =ஒழுக்கம் நடை பெறாது ; வியன் தரு=பெரியமரம் ; வேர் இன்றி=வேர் இன்றி=அமையாது=நிலைபெறாது ; நின் பேர் இன்று=நின் திருநாமம் இன்றி ; பிறங்குகதி=சிறந்து விளங்கும் ரக்ஷிப்பு அல்லது மோக்ஷம் ; அமையாது=கிட்டாது ; ஆர் இன்று எனை மீட்பர்=இன்று வேறு யார் என்னை ரக்ஷிக்கக் கூடியவர் ; அரும்பொருளே=கிடைத்தற்கரிய செல்வமே.

24. நாவார மொழிந்து நயந்து உன் அடி
பாவாரம் மிலைந்த பழிச்ச அருள்
ஜீவா ரமணீய செஞ்சொல் கவிஞர்
தேவாரம் மிலைந்து செழும் புயனே.

பா + ஆரம்=பாவாலாகிய மாலையை ; உன் அடி மிலைந்து= உன் திருவடியில் சூட்டி ; நா + ஆர மொழிந்து=நாவாரப்பாடி ; நயந்து=அன்பு கூர்ந்து ; பழிச்ச அருள்=உன்னைத் துதிக்க அருள்புரி ; ஜீவா=ஜீவாதாரமானவனே ; ரமணீய=மகிழ்ச்சி தரும்; செஞ்சொல்=அழகிய சொற்களைக் கொண்ட; கவிஞர்= புலவர் சொன்ன ; தேவாரம் மிலைந்து=தேவாரப்பாடல்களை மாலையாக அணிந்த ; செழும் புயனே=அழகிய புயங்களை யுடையனே.

25. கழியாத கடுந்துயர் கைவரினும்
ஒழியாத விஸ்வாசம் உவந்து அருள்வாய்
பழியாதும் இலாது அரும்பாடு புணர்ந்து
அழியாத நலம் தரும் ஆண்டவனே.

பழியாதும் இலாது=துன்பத்திற்குக் காரணமாகிய பழிபாவம் ஒன்றும இல்லாமல் ; அரும்பாடு புணர்ந்து=சிலுவையில் கொடிய பாடுபட்டு ; அழியாத நலம்=அழியாத மோக்ஷ சுகத்தை; தரும் ஆண்டவனே=தருகின்ற ஆண்டவனே ; கழியாத கடுதுயர்=நீங்காத கொடிய துன்பம் ; கைவரினும்=வந்தாலும், உவந்து=அன்பு கூர்ந்து ; ஒழியாத விஸ்வாசம் அருள்வாய்= ஒழிந்து போகாத விஸ்வாசத்தைத் தந்தருள்வாயாக.

கி. மு. சங்கப் பொருட்கள்
டிசம்பர்-1954
அட்வெந்து

பழைய ஏற்பாட்டில் மேசியாவைப்பற்றிய வாக்குத்தத்தங்கள்.

டிசம்பர்

1 *தீர்க்கதரிசனத்தின் நம்பிக்கை* ஏசாயா 2:2-4
2 *கர்த்தரின் நாள்* ஏசா. 2:5-19
3 *மேசியாவை எதிர்பார்த்தல்* ஏசா. 7:10-16
4 *மேசியாவையும் அவர் ஊழியத்தையும் எதிர்பார்த்தல்* சங். 72
5. *நம்பிக்கை* எரேமி. 33:15

கிறிஸ்துவின் ஜயந்திக்காக இருதயத்தை ஆயத்தப்படுத்தல்.

6. *தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்* யோவான் 3:16
7. *அருமையான வாக்குத்தத்தங்கள்* II பேதுரு 1:1-11
8 *ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்* கலாத். 4:1-7
9 *தேவகுமாரன்* I யோவான் 5:1-5
10. *தம் சொந்தத்தில் வந்தார்* யோவான் 1:1-18
11. *கடவுளின் ஈவு* ரோமர் 5:12-21
12 *இம்மானுவேல்* மத். 1:18-25

கிறிஸ்துவின் வருகை

மேசியாவை எதிர்பார்த்தல் (ஏசாயா 7:10-16)

13. *அவர் தேவ குமாரனாய் இருப்பார்* ஏசாயா 9:1-7
14. *அவர் தேவனின் ஊழியக்காரனாய் இருப்பார்* ஏசாயா 42:1-7
15. *அவர் நம்முடைய மேய்ப்பனாய் இருப்பார்* ஏசாயா 40:1-11
16. *அவர் நம்முடைய பாவங்களை சுமப்பவராய் இருப்பார்* ஏசாயா 55:1-13
17. *அவர் நம்முடைய ரட்சகராய இருப்பார்* ஏசா. 53:1-13
18 *அவர் நம்முடைய ராஜாவாய் இருப்பார்* ஏசா. 11:1-9
19. *மேசியாவின் வருகையை எதிர்பார்த்தல்* ஏசாயா 7:10-16

இயேசு பாலகன் முன் அணையைச் சுற்றி—கிறிஸ்து ஜயந்தியின் சந்தோஷம்.

20 *யோசேப்பும் மரியம்மாளும்* லூக் 2:1-7
21. *தேவதூதனும் மேய்ப்பரும்* லூக். 8:8-14
22 *சாஸ்திரிகளும் ஏரோதும்* மத். 2:11-18
23. *தீர்க்கதரிசியும்— தீர்க்கதரிசினியும்* லூக் 2:25-39
24. *ஏசுவை ஏற்றுக்கொண்டவர்களும்—அவர் புறக்கணிக்கப்படுதலும்* யோவா. 1:9-14
25. *ஓநாயும், ஆட்டுக்குட்டியும்* ஏசாயா 11:1-9
26. *இயேசுபாலகன் முன் அணையைச்சுற்றி* மத். 2:8-11

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

27. அவருடைய வருகை போனபடியே திரும்பவருவார் அப். 1 : 1-11
28. அவருடைய வருகை திடீர் என்று இருக்கும் மத் 24 : 35-42
29. அவருடைய வருகை நியாயதீர்ப்பைக் கொண்டு வரும் மத். 25 : 31-46
30. அவருடைய வருகை ஆறுதலைக்கொடுக்கும் யோ 14 : 1-16
31. அவருடைய வருகை பலனளிக்கிறதாய் இருக்கும் மத் 25 : 14-30

அத்தியட்சாதீன தேவ ஊழியரின் வருடாந்திரப் பரீட்சை 1954

கடந்த ஆகஸ்டு மீ'த்தில் நடந்த பரீட்சையில் ஏறக்குறைய 400 பேருக்கதிகமானவர்கள் கலந்து கொண்டனர். வழக்கம்போல் விவரங்க ளடங்கிய ஜாபிதா அச்சிலிருக்கிறது. ஆனால் வெகுமதி எடுத்தவர்களுடைய பெயர்களை வரிசைக்கிரமமாய் இங்கு கொடுக்கிறோம் :—

முதல் வகுப்பு

1. ஸ்ரீ ஜி. சாமுவேல், வத்தலக்குண்டு ரூ. 4
2. ஸ்ரீ ஜேம்ஸ்தனராஜ், மானாமதுரை ரூ. 3
3. ஸ்ரீமதி செல்வராஜ் அம்மாள், மல்லன்கிணர் ரூ.2

இரண்டாம் வகுப்பு

1. ஸ்ரீமதி அருள்சூடாமணி, கரிசல்குளம் ரூ. 7
2. „ ஞானமணி, கோம்பை ரூ. 6
3. „ தர்மநேசம்மாள், இளந்தோப்பு, மதுரை ரூ. 5
4. „ டெய்ஸி செல்லத்துரை, மேலூர் ரூ. 4
5. „ செல்லம்மாள் செல்லையா, அருப்புக்கோட்டை ரூ. 3
6. „ தவமணி, கோம்பை ரூ. 2½
7. „ செல்லத்தாய், கம்பம் ரூ. 2
8. ஸ்ரீ சாமிக்கண் „ } ரூ. 1½
9. „ பொன்னையா, மூன்றடைப்பு } ரூ 1½
10. ஸ்ரீமதி வில்லிகிஷ்மபாய், திருமங்கலம் ரூ. 1

மூன்றும் வகுப்பு

1. ஸ்ரீமதி ஏசுவடியாள், B.W.மதுரை ரூ. 4
2. „ முத்தம்மாள் தானியேல் ரூ. 3
3. „ ரூத் ரஞ்சிதம் B W. அருப்புக்கோட்டை ரூ. 2

பாஸ்டரேட்டுக்குரிய கொடி இந்தவருடம் கரிசல்குளம் பாஸ்டரேட்டுக்கு உரியது.

பசுமலை,
25—10—54.

தலைவர்,
வேதபாடசாலை

வேதப்பாடப் பரீட்சை

போர்டிங் பாடசாலைகள், 1954

8-ம் வகுப்பு

1.	பாலகிருஷ்ணன்,	அருப்புக்கோட்டை	ரூ. 5
2	துரைராஜ்	”	4
3.	நடராஜன்	”	3

7-ம் வகுப்பு

1.	சாராள்,	மானாமதுரை	ரூ. 5
2.	லில்லி		4
3.	ஜெயசிரோமணி,	அருப்புக்கோட்டை	3

6-ம் வகுப்பு

1.	சொர்ணம்,	அருப்புக்கோட்டை	ரூ. 5
2	பாப்பா	”	4
3.	சாந்தா	வத்தலகுண்டு	4
4.	முத்து	”	3

5-ம் வகுப்பு

1	மோசே,	அருப்புக்கோட்டை	ரூ. 5
2.	ஹெப்சிபா	”	4
3	தாவீது	திருமங்கலம்	3

அத்தியட்சாதீனப் பொக்கிஷதார் மேற்கண்ட வெகுமதிகளை அனுப்பிவைப்பார்கள்.

வத்தலகுண்டு
18—10—'54

எஸ். ஏ. ஜேக்கப்
தலைவர்.

விளம்பரம்

அதிசய அடுப்பு

மகன் குளா என்கிற புதுமாதிரி கல்லுப்பட்டி அடுப்புகள் விலைக்கு கொடுக்கப்படும். ஒரு அடுப்பின் விலை ரூ. 4-0-0.

இந்த அடுப்பின் விசேஷ அம்சங்களாவன:—

விறகு அதிக மிச்சப்படும். சாதாரண அடுப்பிற்குத் தேவையான அளவில் பாதிதான் இந்த அடுப்பை உபயோகிப்பவர்களுக்குத் தேவையாயிருக்கும் புகை சமையல் அறையில் தங்காது. அதிக சீக்கிரம் சமையலை முடித்து விடலாம்.

இருப்புக் குறைவாயிருப்பதால் உங்கள் ஆர்டருக்கு முந்திக் கொள்ளுங்கள்.

கோழிகள்

வெள்ளை லெக்ஹார்ன், கருப்பு மினோர்கா, ரோடைலண்டு சிவப்பு, பிளிமத்ராக் கோழிகளும், முட்டைகளும் இப்பொழுது விற்பதற்குத் தயாராயிருக்கின்றன. உங்களுக்குத் தேவையானவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதும்படி கேட்டுக் கொள்கிறேன்.

செல்லப்பா,
அத்தியட்சாதினக் கிராம முன்னேற்ற ஊழியர்,
பசுமலை.

CONNEMARA PUBLIC LIBRARY
19 JAN 1956
MADRAS

வேத வினாக்கள்

(கனம் செல்வம் டேயிலர் அம்மாள், பசுமலை)

1. வேதாகமத்தில் முத்துக்கு எது சரியான திருஷ்டாந்தம்?
2. பலஸ்தீனாவின் உயர்ந்த மலையின் பெயர் என்ன?
3. கிழிந்துபோன பழம் புடவைகள் கந்தத்துணிகள், கயிறுகள் மூலமாய் துரவினின்று மீட்கப்பட்டது யார்?
4. ஜாதிகளுக்கு ஆரோக்கியம் அளிக்கும் விருட்சத்தின் இலைகளைப் பற்றி எங்கே வாசிக்கிறோம்?
5. நாவின் தன்மைகளைப்பற்றி வேதத்தில் எங்கே வாசிக்கிறோம்?
6. மனிதர் பேசும் வீணான வார்த்தைகளைப்பற்றி இயேசு எங்கே கூறுகிறார்?
7. ஐரோப்பாக் கண்டத்தில் முதல் முதல் கிறிஸ்தவரானது யார்?
8. மோசே எழுதின சங்கீதம் எது?
9. எந்த சந்தர்ப்பத்தில் இரண்டு கரடிகள் 42 பிள்ளைகளை பீறிப் போட்டன?
10. வேதத்தில் நீண்ட அதிகாரம் எது?
11. கலிலேயாக் கடலின் மறுபெயர் என்ன?
12. கடக்கக்கூடாத நதியின் தரிசனத்தைப்பற்றி எங்கே பார்க்கிறோம்?

குருமாருக்கு ஒரு வேண்டுகோள்

1955-ம் ஷுத்திற்கு தங்களுக்கும் தங்கள் பாஸ்ற்றேற்றுக்கும் வேண்டியிருக்கும் பஞ்சாங்கங்கள், I.S.S.U. Notes, B.K.E. Notes முதலியனவற்றை அவரவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் periodical அச்சுபாரத்தில் பூர்த்திசெய்து லோக்கல் கவுண்சில் சேர்மென் அவர்கள் மூலமாக டிப்போவுக்கு உடனே அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் 15—11—54க்குள் ஷை பாரங்கள் பூருவும் டிப்போவுக்கு வந்துவிட்டால் கால தாமதமன்னியில் டிசம்பர் மாதமுடிவில் அவரவர்கள் ஆர்டர்படி புஸ்தகங்களை அனுப்ப அனுகூலமாயிருக்கும்: periodical form-ல் இந்தவருஷம் சொந்தம் எவ்வையென்றும் பாஸ்றேற்றுக்கு எவை யென்றும் தெளிவாக எழுதக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 1955 ஷு முதல் ஒரு குருவானவர் பேரில் இரண்டு கணக்குகள் இருந்து வரும் ஒன்று ஷை குருவானவர் தன் சொந்தத்திர்கு வாங்கினதாகும்: மற்றொன்று பாஸ்றேற்றின் கணக்கில் வாங்கப்பட்டது.

குருமார் தங்க்ள் periodical formஐ காலா காலத்தில் பூர்த்தி செய்து அனுப்பாததினால் அத்தியக்ஷாதீன ஊழியர்களுக்கு வெகு கஷ்டங்கள் உண்டாகிறது. உதாரணமாக நமது அத்தியக்ஷாதீனத்திற்கு Village Workers Almanac பஞ்சாங்கங்கள் எவ்வளவு தேவையாயிருக்குமென்பதை யூகிக்கவும் தேவைப்பார்த்து அச்சடிக்கவும் இயலாதவர்களாய் இருக்கிறார்கள். ஆகையால் எல்லா குருமாரும் தயவுசெய்து **15—11—54** க்குள் ஷை periodical formஐ பூர்த்திசெய்து டிப்போ மானேஜருக்கு ஷை தெய்திக்குள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யத் திரும்பவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அப்பா ஸ்ரீநிவாஸன்,
மானேஜர்.

Lenox Press, Pasumalai, 9—11—'54. 480 C.